[1972 ஆகஸ்ட் 21

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, அதுபற்றி ஏற்கெனவே கேரளா, மைசூர், ஆந்திரா ஆகிய அரசாங்கங்களின் தொழிலாளர் நல ஆணையாளர்களுடன் நமது மாநில தொழிலாளர் நல ஆணையாளர் கடிதப் போக்குவரத்து நடத்தியிருக்கிறார். இன்னும் திட்டவட்டமான பதில் வரவில்லை. எனினும் பொதுமக்களுடைய கருத்தை அறிவதற்காக 'முதனிலை' அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டிருக்கிறது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு உரிய ஊதியத்தையும், வசதிகளையும் பெற்றுத்தர முத்தரப்பு மாநாட்டில் மேற்கொள்ளபட்ட முடிவுகள் எல்லாம் செயல்படுத்தப்பட்டு விட்டனவா? இல்லையானால் மேற்கொண்டு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்ததுபோல, பிற மாநிலங்களின் கருத்தை அறிய நமது மாநில தொழிலாளர் நல ஆணையாளர் முயற்சி மேற்கொண்டிருக்கிறார். இத்துடன் பொது மக்கள் கருத்தை அறிவதற்காக 'முதனிலை' அறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டிருக்கிறது.

*212. வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தொழிலாளர்களுக்கு உற்பத்திக்கேற்ற ஊதியம் வழங்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, உற்பத்தியை மிக அதிகமாகப் பெருக்க ஆவன செய்ய வேண்டுமென்று முயற்சி எடுத்து வருகின்ற இந்தக் காலத்தில் அத்தகைய தொழிலாளர்களுக்கு அவர்கள் உற்பத்தி எவ்வளவு அதிகமாகச் செய்கிறார்களோ அந்த அளவுக்கு அவர்களுக்கு போனஸ் அளித்து ஊக்கப்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, இம் மாநிலத்தில் உற்பத்திக்கேற்ற ஊதியம் வழங்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும் ஊக்கத் தொகை அளிக்கும் திட்டங்களும், உற்பத்தி உயர்வையொட்டி ஊதியத்தையும் உயர்த்திக் கொடுப்பதற்கு வகை செய்யும் சீரமைப்புத் திட்டங்களும் தனித்தனி நிறுவனங்களைப் பொறுத்து, தொழி

1972 ஆகஸ்ட் 21]

லாளர் நலத் துறை அதிகாரிகளின் நன்முயற்சியுடன் அவ்வப்போது பேச்சு வார்த்தைகள் நடத்தி முடிவு செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டில் கீழ்க் காணும் தொழிற்சாலைகளில் உற்பத்தியுடன் இணைந்து ஊதியம் வழங்கும் முறை பின்பற்றப்பட்டு வருகிறது :

1. சிம்சன் தொகுதியில் பொறியியல் நிறுவனங்கள்.

2. மலைத் தோட்டத்தில் பறித்தல் வேலை.

3. பஞ்சாலைகள் பலவற்றில் குறிப்பாக நூல் சுற்றும் துறைகளில்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, ஊக்கத்திற்கேற்ற ஊதியம் வழங்கு கின்ற நேரத்தில் தொழிலாளர்களுக்கு ஊக்கமும், முதலாளிகளுக்கு வருமான மும், அதேநேரத்தில் நாட்டுக்கும் வருமானம் கிடைக்கிறது. ஆகவே, மொத்த மாக இதைப் பரிசீலித்து இந்தத் திட்டத்தை அமுல்படுத்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, உற்பத்தியுடன் ஊதியத்தை இணைக்கும் காரியத்துக்காக பல்வேறு துறைகளில் ஏற்றுக் கொள்ளப்பட்ட உற்பத்தித் திறனைக் கருத்திற் கொண்டு உற்பத்தியுடன் ஊதியத்தை இணைக்கும் குறிக்கோள் அளவுகள் குறிப்பிடப்பட்டிருந்தாலும் கூட, அந்தக் குறிக்கோள் அளவுகளுக்கு மேற்பட்டு அதிக அளவு உற்பத்தியை எய்த தொழிலாளர்கள் நன்கு பாடுபடுவதோடு அவர்கள் பெறும் சிறப்பான அடிப்படைச் சம்பளத்துடன் ஊக்கத்தொகையும் பெற வேண்டும். என்பதும், உற்பத்தி உயர்வுக்காக வரையறுத்த வீதங்களைக் காட்டிலும் அதிக ஊதியம் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும்போது தற்போது உள்ளதுபோல் யூனிட் ஒன்றுக்குக் கூடுதல் ஊதியம் அல்லது திருத்தியமைக்கப்பட்ட அடிப்படை ஊதியங்களின் மீது வரையறுத்த ஊதியங்கள் இவற்றில் எது அதிகமாக உள்ளதோ அது கிட்டும் வகையில் மேற்படி வீதங்கள் தகுந்தவாறு திருத்தி யமைக்கப்பட வேண்டும் என்பது சில கம்பெனிகளில் செய்துகொண்ட உடன் படிக்கைகளிலிருந்து தெரிய வருகிறது. அது எல்லாக் கம்பெனிகளுக்கும் நீட்டிக்கப்படுவதுபற்றி பரிசீலிக்கப்பட்டு விரைவில் முடிவெடுக்கப்படும்.

சாணார்பட்டிக்குத் துணைப் பதிவாளர் அலுவலகம்

*213 வின—திரு. க. நாகராஜன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், திண்டுக்கல் வட்டம், சாணார்பட்டியில் துணைப் பதிவாளர் அலுவலகம் ஒன்றைத் திறப்பதற்கான செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இல்லை.